நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## தலையங்கம்: உடனடித் தேவை உரிய விலை!

First Published : 24 Apr 2012 04:55:53 AM IST

Last Updated : 24 Apr 2012 04:58:51 AM IST

ஒவ்வோர் ஆண்டிலும் ஒரு விவசாயப் பிரிவு, சந்தை வேளாண்மைக்குப் பலியாகும். வழக்கமாகப் பருத்தி, கரும்பு விவசாயிகள்தான் இதில் சிக்கிக்கொள்வார்கள். இந்த முறை மஞ்சள் விவசாயிகள் பலியாகியிருக்கிறார்கள்.

தற்போது தமிழ்நாட்டில் மஞ்சள் ஒரு குவிண்டால் அதிகபட்சம் ரூ.3,000 முதல் ரூ.4,000 வரைதான் விலை போகிறது. 2009, 2010-ஆம் ஆண்டுகளில் மஞ்சள், குவிண்டால் ஒன்றுக்கு ரூ.13,000 முதல் ரூ.17,000 வரை விலைபோனது. அதே மஞ்சள் இப்போது வெறும் ரூ.3,000தான் விலை போகிறது என்பதால் விவசாயிகள் நொடிந்துபோய் கண்கலங்கி நிற்கின்றனர். இது அவர்களுக்கு எதிர்பாராத அடி.

விலை குறைந்து போனதற்கு முக்கியக் காரணம், அதிக விளைச்சல். கடந்த இரு ஆண்டுகளில் மஞ்சளுக்கு அதிக விலை கிடைத்த காரணத்தால் விவசாயிகள் வழக்கத்துக்கும் அதிகமாக மஞ்சள் சாகுபடியில் ஈடுபட்டனர். அதனால் மஞ்சள் உற்பத்தி அதிகரித்து, தேவைக்கும் அதிகமான மஞ்சள் சந்தைக்கு வரத் தொடங்கியது. இதனால் விலை மிகவும் மோசமாகக் குறைந்தது என்பது மஞ்சள் கொள்முதல் வியாபாரிகள் சொல்லும் விளக்கம்.

உற்பத்தி பெருகினால் விலை குறையும் என்கிற சித்தாந்தம், கார் உற்பத்தியில் இல்லை, இருசக்கர வாகன உற்பத்தியில் இல்லை. செல்போன் வியாபாரத்தில் இல்லை. ஆனால், விவசாயத்தில் மட்டும் நினைவு தெரிந்த நாள் முதல் இதே நிலைமை தொடர்கிறது. ஏனென்றால், இது அழுகும்பொருள். இருப்பில் வைத்து விற்க முடியாது. ஆனால், மஞ்சள், தக்காளி அல்லவே, அழுகிவிடுவதற்கு!

மஞ்சள் கிழங்குகளைப் பாதுகாப்பாக சில ஆண்டுகளுக்குச் சேமித்து வைக்க முடியும். அறிவியல் பூர்வமான சேமிப்பு முறைகள், தரமான கிடங்கு இருந்தால் போதுமானது. இப்போது குறைவான விலைக்கு வாங்கும் வியாபாரிகளும்கூட, தரமான மஞ்சள் கிழங்குகளைப் பிரித்தெடுத்து, நல்ல விலை கிடைக்கும்வரை பாதுகாத்து வைக்கிறார்கள். அவர்களிடம் அதற்கான பொருளாதார வசதி இருக்கிறது. ஓரிரு ஆண்டுகள் காத்திருக்க முடிகிறது. ஆனால், விவசாயிகளுக்கு அது இயலாது. அப்போதைக்கப்போது விற்றுப் பணம் பார்த்தால்தான் அடுத்த சில மாதங்களின் வாழ்க்கை, விவசாயம் எல்லாமும் நடக்கும்.

மஞ்சளுக்கு உலகம் முழுவதும் நிரந்தரமான தேவை இருக்கிறது. தற்போது மஞ்சளின் மருத்துவ குணங்கள் உலகம் முழுவதும் அறியப்பட்டுள்ளன. நோய் எதிர்ப்பு சக்திக்கும், தோல்நோய்களுக்கும், பெண்களின் அழகுப் பாதுகாப்பு பொருள்களுக்கும் மஞ்சள் தேவை. இதற்கான சந்தை நிரந்தரமானது.

இந்தியாவில் மஞ்சள் பயன்பாடு மற்றவர்களைவிட அதிகம். உணவு, வழிபாடு, பண்பாடு என்று எல்லாவற்றிலும் மஞ்சளின் பயன்பாடு இருந்துகொண்டே இருக்கும். உள்நாட்டுத் தேவை மட்டுமன்றி, மஞ்சளை ஏற்றுமதி செய்யும் வாய்ப்புகளும் அதிகம்.

ஏப்ரல்-டிசம்பர் காலகட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் நடைபெற்ற மஞ்சள் ஏற்றுமதி குறித்து மத்திய அரசு வெளியிட்ட புள்ளிவிவரத்தைப் பார்த்தால், மஞ்சள் ஏற்றுமதி சிறப்பாகவே இருக்கிறது என்பதைக் காண முடியும். 2008-09-இல் 52,500 டன் மஞ்சள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 2009-10-ஆம் ஆண்டில் 50,750 டன், 2010-11-இல் 49,050 டன், ஆனால், 2011-12-ஆம் ஆண்டில் 62,000 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதாவது மற்ற ஆண்டுகளைக் காட்டிலும் தற்போது மஞ்சள் ஏற்றுமதி மிக அதிகமாக இருக்கின்றது. ஆகவே, ஏற்றுமதிக்கான வாய்ப்பு குறைந்துவிட்டது என்று சொல்வதற்கு இல்லை.

மஞ்சளைப் பொருத்தவரை அரசின் ஒழுங்குமுறை மார்க்கெட் மட்டுமன்றி, தனியார் மஞ்சள் வியாபாரிகள் அமைப்புகளும் கொள்முதல் செய்கின்றன. எந்த இடம் என்றாலும், மஞ்சளை வாங்குபவர்கள் பெருவியாபாரிகள். அவர்கள் கூட்டணி அமைத்துக்கொண்டு விலையைக் குறைத்தால், ஒன்றும் செய்ய முடிவதில்லை.

அதனால், நெல்லுக்கும் கரும்புக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிப்பதைப்போல, மஞ்சளுக்கும் ஒரு விலையை அரசு நிர்ணயிக்க வேண்டும் என்பது விவசாயிகளின் கோரிக்கையாக இருக்கிறது. இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளாமல் மொத்த வியாபாரிகள் கூட்டணி பார்த்துக் கொள்கிறது.

முட்டைக்கு விலையை முட்டை உற்பத்தியாளர்களே தீர்மானிப்பதைப்போல மஞ்சளுக்கும் விலை நிர்ணயம் செய்ய முடியும். ஆனால், மஞ்சள் உற்பத்தியாளர்கள் பலவகையாகப் பிரிந்து கிடக்கிறார்கள். வசதியுள்ள விவசாயிகள் மஞ்சளைச் சேமித்து வைக்கிறார்கள். வசதி குறைந்தவர்கள் சந்தையின் நெருக்குதலுக்குப் பணிந்து, நஷ்டத்துக்கு ஆளாகிறார்கள். மஞ்சள் விவசாயிகள் அனைவரையும் ஒரே குடையின் கீழ் கொண்டுவந்து, அவர்களுக்கு மஞ்சளைப் பராமரிக்கவும், ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதும் தமிழக அரசின் கடமை.

இதையெல்லாம்விட உடனடித் தேவை, அரசு சார்பில் குறைந்த வாடகையிலான மஞ்சள் சேமிப்புக் கிடங்குகள். இப்போதுள்ள சேமிப்புக் கிடங்குகளில் மஞ்சளை அதிக அளவு வைக்க முடியாது. அதற்கான வசதிகள் இல்லை. மஞ்சள் அதிகமாகப் பயிரிடப்படும் ஈரோடு மாவட்டத்தில் மஞ்சளை மட்டுமே சேமித்து வைக்கும் பிரத்யேகமான கிடங்குகள் பலவற்றை அரசு ஏற்படுத்த வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் மஞ்சள் சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, விற்பனையாகாமல் தேங்கியுள்ள மஞ்சளின் அளவு ஆகிய தகவல்களை விவசாயிகளிடம் கொண்டுசேர்க்க வேண்டிய பொறுப்பு வேளாண்துறையைச் சேர்ந்தது. இந்தத் தகவலை விவசாயிக்குத் தெரிவித்தால்தான், அடுத்த ஆண்டு மஞ்சள் போடலாமா, வேண்டாமா என்பதை விவசாயி தீர்மானிக்க முடியும்.

இவை யாவும் நாளை செய்ய வேண்டியவை. உடனே செய்ய வேண்டியது, இவர்களின் மஞ்சளுக்கு உரிய விலை கிடைக்கச் செய்வது. குறைந்தபட்சம் அவர்கள் போட்ட முதலீட்டை எடுக்கும் அளவுக்காவது மஞ்சளுக்கு ஒரு விலையை நிர்ணயித்தாக வேண்டும். இப்போதைய உடனடித் தேவை, தமிழக அரசின் தலையீடு.

## கோவையில் குறைந்துவரும் விவசாய சாகுபடி பரப்பு

-கே.கே.மணிகண்டன்-

First Published : 24 Apr 2012 05:31:04 AM IST



கோவை: கோவை மாவட்டத்தில், 2005-06ம் நிதியாண்டைவிட 2009-10-ம் ஆண்டில் விவசாய உற்பத்தி குறைந்துள்ளது. இதற்கு விவசாய நிலத்தின் பரப்பளவு குறைந்துவருவதே காரணம்.

கோவை மாவட்டத்தில் மொத்த விவசாயப் பரப்பளவு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ஹெக்டேர். இதில், ஒரு லட்சத்து 15 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு நிலங்கள் பி.ஏ.பி. பாசனம், கிணற்றுப் பாசனம் உள்ளிட்ட இறவைப் பாசன வசதி கொண்டவை. 64 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவு வானம் பார்த்த மானாவாரி நிலங்கள்.

நெல் சாகுபடி குறைந்தது: 2005-06-ம் நிதியாண்டில் 3,488 ஹெக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. பின்னர், இப்பயிரின் சாகுபடி பரப்பளவு படிப்படியாக குறைந்து, 2009-10-ல் 2,816 ஹெக்டேராகிவிட்டது.

அதேபால, சிறுதானியங்களான சோளம், மக்காச்சோளம், கம்பு, ராகி, பயறு வகைகளான உளுந்து, துவரை, மொச்சை, பாசிப்பயறு, கொள்ளு, நறுமணப் பயிர்களான மஞ்சள், மிளகாய் உள்ளிட்டவற்றின் சாகுபடி பரப்பளவும் குறைந்துள்ளது.

இம்மாவட்டத்தில், 3,100 ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு பயிரிடப்பட்ட நிலையில், 2009-10ம் ஆண்டில் 1,800 ஹெக்டேரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பழவகை உற்பத்தி அதிகரிப்பு: 2005-06-ம் ஆண்டில், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்ட பழவகைகள், 2009-10ல் 13 ஆயிரம் ஹெக்டேராக பரப்பளவு அதிகரித்துள்ளது. காய்கறிகள் சாகுபடி 7,800 ஹெக்டேர் என்பதில் இருந்து 6,500 ஹெக்டேராகக் குறைந்துள்ளது.

பருத்தி சாகுபடி வீழ்ச்சி: 4,400 ஹெக்டேர் பரப்பளவாக இருந்த பருத்தி சாகுபடி தற்போது மிகவும் குறைந்துவிட்டது. 2009-10ம் ஆண்டில் ஆயிரம் ஹெக்டேரில் மட்டும் பருத்தி சாகுபடி நடந்தது.

எண்ணெய் வித்துப் பயிர்களான நிலக்கடலை, சூரியகாந்தி, எள், தென்னை சாகுபடி, 87 ஆயிரம் ஹெக்டேராக இருந்தது, 85 ஆயிரம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது. இதில், நிலக்கடலை சாகுபடி பாதியாகக் குறைந்துவிட்டது. கோவை மாவட்டத்தில் பெருகிவரும் தொழில் வளர்ச்சி காரணமாக வீட்டு மனைகளாகவும், தொழிற்சாலைகளாகவும் விவசாய நிலங்கள் மாற்றப்படுகின்றன. விவசாய விளைபொருள் சாகுபடிப் பரப்பளவு கணிசமாகக் குறைந்து வருகிறது. இது தொடர்பாக அரசும், வேளாண்மைத் துறையும் ஆய்வு நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், உணவுக்குத் திண்டாடும் நிலை எதிர்காலத்தில் ஏற்படலாம்.

*விவசாய சாகுபடி பரப்பளவு விவரம்*

பயிர் ரகம் 2005-06 2009-10

(ஹெக்டேர்) (ஹெக்டேர்)

நெல் 3,488 2,816

சிறுதானியங்கள் 54,000 41,000

பயறு வகைகள் 14,400 12,600

கரும்பு 3,100 1,800

பருத்தி 4,400 1,000

எண்ணெய்

வித்துகள் 87,000 85,000

நறுமணப் பொருள்கள் 7,400 7,000

காபி, தேயிலை 13,700 13,760

பழ வகைகள் 10,000 13,000

காய்கறிகள் 7,800 6,500

மலர் வகைகள் 955 800

**காரணம் என்ன? விவசாயிகள் கருத்து**

விவசாய உற்பத்தி பாதிப்பு குறித்து விவசாயி பரமசிவம் கூறியது:

விவசாய விளைபொருள் உற்பத்தி குறைந்ததற்கு முக்கிய காரணம் கூலிஆள் பற்றாக்குறைதான். கடந்த 4 ஆண்டுகளாக மத்திய அரசின் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணியில், கிராமத்தில் உள்ள விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் பங்கேற்கின்றனர். இதனால், அவர்கள் விவசாய வேலைக்கு வருவதில்லை. அடுத்ததாக, விவசாயக் கூலி உயர்வு, இடுபொருள் விலை உயர்வு காரணமாக விளைபொருள் உற்பத்திச் செலவு கட்டுபடியாவதில்லை. இதனால், சிறுதானியப் பயிர்கள், பருத்தி, நிலக்கடலை சாகுபடி கடந்த 15 ஆண்டுகளாக படிப்படியாகக் குறைந்துள்ளது. முன்பு கோவை மாவட்டத்தில் நிலக்கடலை சாகுபடி அதிகமாக இருந்தது. திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து கூலித் தொழிலாளர்கள் குடும்பத்துடன் கோவைப் பகுதிக்கு வந்து, நிலக்கடலை அறுவடைப் பணியில் ஈடுபடுவார்கள். அந்த நிலை இன்று மாறி விட்டது. தற்போது, பருத்தி, நிலக்கடலை சாகுபடியே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்றார். காணாமல் போன சிறுதானிய உற்பத்தி: கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத் தலைவர் வழுக்குப்பாறை பாலு கூறியது:

சிறுதானியங்கள் அதிக அளவில் உற்பத்தி செய்யும் மாவட்டமாக முன்னர் கோவை மாவட்டம் இருந்தது. தற்போது சிறுதானியம், பயறு வகை உற்பத்தி அழிந்து விட்டதென்றே சொல்லலாம்.

ஆள்பற்றாக்குறையால் விவசாயிகள், தங்கள் விளைநிலங்களை விற்று வருகின்றனர். தங்கள் நிலத்தை பலர் தரிசாகப் போட்டுவிடுகின்றனர். தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் வேலை செய்யும் கூலித் தொழிலாளர்களை விவசாயப் பணிக்குப் பயன்படுத்தும் வகையிலான திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும் என்றார்.

## எட்டாக்கனியானது பலா!

First Published : 24 Apr 2012 04:23:20 AM IST



சென்னை ஏப். 23: "தானே' புயல் பாதிப்பு காரணமாக பலாப்பழம் வரத்து குறைந்துள்ளது. இதனால், கோயம்பேடு சந்தையில் பலாப்பழம் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன் "தானே' புயலால் கடலூர், காஞ்சிபுரம், திருவாரூர், நாகை உள்ளிட்ட மாவட்டங்களில் பாதிப்பு ஏற்பட்டது. இதில் கடலூர் மாவட்டம், பண்ருட்டி பகுதியில் கடும் பாதிப்பு ஏற்பட்டது. சாகுபடி செய்யப்பட்டிருந்த பயிர்கள் முற்றிலும் சேதமடைந்தன. குறிப்பாக பலாப்பழ மரங்கள் பல பகுதிகளில் வேரோடு சாய்ந்தன.

முக்கனிகளான மா, பலா, வாழை ஆகியவற்றில் வாழை ஆண்டு முழுவதும் மக்களுக்குக் கிடைக்கும். ஆனால் மாம்பழமும், பலாப்பழமும் ஆண்டின் சில மாதங்கள் மட்டுமே விளைச்சல் இருக்கும். இந்நிலையில் புயல் பாதிப்பால், இந்த ஆண்டு பலாப்பழம் உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது.

பொதுவாக பிப்ரவரி மாதமே பண்ருட்டியிலிருந்து கோயம்பேடு சந்தைக்கு பலாப்பழகங்கள் அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வரப்படும். இந்த ஆண்டு உற்பத்தி குறைந்துள்ளதால், ஏப்ரல் மாதம் முடிவடைய உள்ள நிலையிலும், பலாப்பழ வரத்து குறைவாகவே உள்ளது.

இதையடுத்து தேனி, புதுக்கோட்டை, நாகர்கோவில் ஆகிய பகுதிகளிலிருந்தும், கேரள மாநிலத்திலிருந்தும் வியாபாரிகள் பலாப்பழத்தை கொள்முதல் செய்து கோயம்பேடு சந்தையில் விற்பனை செய்து வருகின்றனர். இதனால் பலாப்பழத்தின் விலை அதிகரித்துள்ளது.

கோயம்பேடு சந்தையில் பலாப்பழ விற்பனை ஏல முறையில் நடக்கிறது. பலாப்பழங்களுக்கு, அதன் தரம் மற்றும் அளவுக்கு ஏற்ப ரூ.100-லிருந்து ரூ.500 வரை விலை கிடைக்கிறது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## தேயிலை இறக்குமதி 7 சதவீதம் சரிவு

ஏப்ரல் 24,2012,00:16

புதுடில்லி: சென்ற 2011ம் ஆண்டில், நாட்டின் தேயிலை இறக்குமதி, 7 சதவீதம் குறைந்து, 1.90 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது.



இதன் மதிப்பு, 173 கோடி ரூபாய். இது, இதற்கு முந்தைய ஆண்டில், 2 கோடி கிலோவாக (214 கோடி ரூபாய்) அதிகரித்திருந்தது என, தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.நம் நாடு, கென்யா, மாலத்தீவு, நேபாளம், அர்ஜென்டினா, ஈரான், இலங்கை, சீனா, கனடா, வியட்நாம், அமெரிக்கா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலிருந்து, தேயிலையை இறக்குமதி செய்து கொள்கிறது. இந்தியாவில், 1,600க்கும் மேற்பட்ட தேயிலை தோட்டங்களில், 20 லட்சத்துக்கும் அதிகமானோர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். சர்வதேச அளவிலான, தேயிலை ஏற்றுமதியில், 11 சதவீத பங்களிப்பை கொண்டுள்ள இந்தியா, ஆண்டுதோறும், 173 கோடி கிலோ தேயிலையை ஏற்றுமதி செய்கிறது. சர்வதேச அளவில், தேயிலை உற்பத்தி மற்றும் பயன்பாட்டில், இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகளுக்கு தோட்டக்கலை இடு பொருட்கள் வழங்கல்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2012,04:24 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்: ஓசூர் அருகே எஸ்.முதுகானப்பள்ளியில், உழவர் பெருவிழாவையொட்டி, விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை சார்பில், மானிய விவசாய இடுபொருட்கள் வழங்கப்பட்டன.தோட்டக்கலை இணை இயக்குனர் பெரியசாமி தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை இயக்குனர் மோகன் முன்னிலை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குனர் சீனிவாசன் வரவேற்றார்.

தோட்டக்கலைத்துறை சார்பில், விவசாயிகளுக்கு, அரசு வழங்கும் மானிய திட்டங்கள், இடுபொருட்கள் மற்றும் புதிய சாகுபடி தொழில்நுட்பங்களை அதிகாரிகள் எடுத்து கூறினர்.

குறிப்பாக, விதை நேர்த்தி செய்தல், குழி தட்டு முறையில் காய்கறி விதைகள் வளர்ப்பது மற்றும் சொட்டு நீர் பாசனத்தின் நன்மைகள் குறித்து, விவசாயிகளுக்கு, தோட்டக்கலைத்துறை ஊழியர்கள் நேரடியாக செயல்முறை பயிற்சி விளக்கம் செய்து காட்டினர்.பின், நூறு சதவீதம் மானியத்தில், மூன்று விவசாயிகளுக்கு, ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 448 ரூபாய் மதிப்பில் சொட்டு நீர் பாசன உபகரணங்கள் வழங்கப்பட்டன. தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இரு விவசாயிகளுக்கு, 10 ஆயிரம் காய்கறி விதைகள் வழங்கப்பட்டன.தேசிய தோட்டக்கலைத்துறை இயக்கம் திட்டத்தின் கீழ், ஒரு விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியத்தில் கைதெளிப்பான் ஒன்று வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை, உதவி வேளாண்மை அலுவலர் வரதராசு, ரமேஷ், கோவிந்தராஜ், விஜயகுமார் ஆகியோர் செய்திருந்தனர்.

## தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2012,03:40 IST

கருத்தை பதிவு செய்ய

கிருஷ்ணகிரி:"கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஐந்து தாலுகாவிலும் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் அமைக்க வேண்டும்' என பாரதிய கிசான் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.சங்க மாவட்ட தலைவர் ராமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கை:தமிழகத்தில் இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்திட தமிழக அரசு தனது பட்ஜெட்டில் விவசாயத்துக்கு, 3,850 கோடி ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.
இதற்காக பாரதிய கிசான் சங்கம் தமிழக அரசுக்கு நன்றியை தெரிவிக்கிறது.தோட்டக்கலை பயிர்கள் அதிகம் உள்ள போச்சம்பள்ளி மற்றும் ஓசூர் தாலுகாவில் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் இல்லை. இதனால் தோட்டக்கலை பயிர்களுக்கு நோய் வந்தநால் எந்த மருந்து அடிக்க வேண்டும் என்று தெரியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். எனவே, தமிழக அரசு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள ஐந்து தாலுகாவிலும் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வாழைத்தாருக்கு விலையின்றி மரத்திலேயே கைவிட்ட விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2012,04:42 IST

கவுந்தப்பாடி: கவுந்தப்பாடி வட்டாரத்தில் மொந்தன் வாழைத்தாருக்கு விலை இல்லாததால், விவசாயிகள் வாழைத்தாரை வெட்டாமல் கைவிட்டுள்ளனர்.பத்துமாதப் பணப்பயிரான

வாழையை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்கின்றனர். பாண்டியம்பாளையம், குஞ்சரமடை, வேலம்பாளையம், குருச்சாவலசு, செங்கோடம்பாளையம், கோமயன்வலசு, நத்தக்காட்டு வலசு மற்றும் குள்ளம்பாளையம் ஆகிய ஊர்களில் அதிக அளவில் மொந்தன், செவ்வாழை, பூவன், பச்சை நாடன், ரஸ்தாளி மற்றும் கதளி ரக வாழைகள் பயிர் செய்துள்ளனர்.

அதிகளவில் மொந்தன் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளது.ஏக்கருக்கு, 750 வாழைக்கன்று பயிரிட்டு, ஆறு நாளைக்கு ஒரு முறை தண்ணீர் விடப்படுகிறது. களை வெட்டுதல், உப்பு வைத்தல், வாழைக்கு மண் அணைத்தல், வாழை வளர்ந்த பின் காற்றுக்கு வாழை சாயாமல் இருக்க கயிறு கட்டுதல் ஆகிய பராமரிப்பு பணிக்கு ஏராளமாக கூலி கொடுக்க வேண்டியுள்ளது.தற்போது, மொந்தன் வாழை வெட்டுக்கு வந்துள்ளது. ஒரு தாரில், 12 சீப்புகள் உள்ளன. சராசரியாக 60 முதல் 70 காய்கள் உள்ளன. 70 ரூபாய்க்கு மட்டுமே விலை போகிறது. உற்பத்தி செலவுக்கு கட்டுப்படியாகமல் உள்ளது. இதனால், வாழைத்தாரை மார்க்கெட்டுக்கு கொண்டு செல்ல மனமில்லாமல், மரத்திலேயே கைவிட்டுள்ளனர்.வாழை சாகுபடிசெய்தால் மாழை, காற்று மற்றும் இயற்கை சீற்றத்தால் இழப்பு ஏற்பட்டால் அரசு மூலம்எந்த உதவியும் கிடைப்பதில்லை, மேலும் இது போன்ற விலை வீழ்ச்சி ஏற்படும் காலத்திலும் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

## பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கடும் சரிவு

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2012,04:37 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: சென்றாண்டை ஒப்பிடுகையில், இதேநாளில் நடப்பாண்டு பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 17 அடி குறைவாக உள்ளது. அணையின் நீர்மட்டம் தொடர்ந்து வீழ்ச்சியடைவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் முக்கிய நீராதாரமாக பவானிசாகர் அணை விளங்குகிறது. நீலகிரி, தெங்குமரஹாடா, குந்தாலகெத்தை, பில்லூர், மோயாறு ஆகிய மலைப்பகுதிகளில் பெய்யும் மழை நீரே, பவானிசாகர் அணையின் ஆதாரம்.

சென்றாண்டு நவம்பர் மாதம் வடகிழக்கு பருவமழை பெய்த காரணத்தால் பவானி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன் காரணமாக, 78 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், 85.89 கன அடியாக உயர்ந்தது.

அதன்பிறகு, அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் சரியாக மழை இல்லாமல், அணைக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து குறைந்தது. தற்போதைய நிலவரப்படி அணைக்கு, 330 கன அடி தண்ணீர் மட்டுமே வரத்தாகிறது.

அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் முதல் போகத்துக்கு ஏப்., 16ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது.

பராமரிப்பு பணி காரணமாக தற்காலிமாக தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், காலிங்கராயன் பாசனத்துக்காக அணையில் இருந்து, ஆற்றில், 750 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. எல்.பி.பி., வாய்க்காலில் ஐந்து கன அடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.அணையின் நீர்மட்டம் சென்றாண்டு ஏப்ரல் மாதம், 23ம் தேதி, 69.7 அடியாக இருந்தது. நடப்பாண்டு அதே நாளான நேற்று, 52.09 அடியாக இருந்தது.
சென்றாண்டை விட, 17 அடி தண்ணீர் குறைவாக உள்ளது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு முழுமையாக தண்ணீர் திறக்கப்படும் நிலையில், ஆற்றில் கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட வேண்டும். இதன் காரணமாக, பவானிசாகர் அணையின் நீர்மட்டம் மேலும் சரிவடையும் நிலை உள்ளது.
அக்னி வெயில் கொளுத்தும் நேரத்தில் அணையின் நீர்மட்டம் சரிவடைவதால், கோடை நேரத்தில் பாசனத்துக்கு தேவையான தண்ணீர் கிடைக்குமா, என்ற கேள்வி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.பவானிசாகர் அணையின் நீர்மட்டம் குறையும் நேரத்தில் திருப்பூர், கோபி, ஈரோடு உள்ளிட்ட இடங்களில் குடிநீருக்கு தேவையான தண்ணீர் கிடைக்குமா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.
கோபி சுற்று வட்டாரத்தில் உள்ள குண்டேரிபள்ளம், பெரும்பள்ளம் ஆகிய அணைகளின் நீர்மட்டமும் வீழ்ச்சியடைந்துள்ளது. விளாங்கோம்பை, மாவேநத்தம், குன்றி ஆகிய பகுதிகளில் இருந்து குண்டேரிப்பள்ளம் அணைக்கு தண்ணீர் வரத்தாகிறது. குன்றி வனப்பகுதியில் இருந்து பெரும்பள்ளம் அணைக்கு தண்ணீர் வரத்தாகிறது.
மழையின்மை காரணமாக வனப்பகுதிகள் முழுவதும் வறட்சியாக காணப்படுகிறது. குண்டேரிப்பள்ளம், பெரும்பள்ளம் ஆகிய அணைகளின் நீர்மட்டம் தொடர்ந்து சரிவடைந்துள்ளதால், அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர்.

**மஞ்சள் ரூ.10 ஆயிரம் விலை கோரி விவசாயிகள் சங்கம் ஆர்ப்பாட்டம்**

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2012,04:34 IST

கருத்தை பதிவு செய்ய
ஈரோடு: மஞ்சளுக்கு, 10 ஆயிரம் ரூபாய் விலை நிர்ணயம் கோரி, தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், ஈரோட்டில் ஆர்ப்பாட்டம் நடந்தது.தென்னை விவசாயிகளுக்கு வழங்கியதுபோல, அனைத்து மஞ்சள் விவசாயிகளுக்கும் அடையாள அட்டை வழங்கி, மஞ்சளுக்கு பத்தாயிரம்

ரூபாய் ஆதார விலை நிர்ணயம் செய்து, நாபெட் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் அரசே கொள்முதல் செய்ய வேண்டும். அனைத்து மஞ்சள் விவசாயிகளுக்கும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வட்டியில்லா பொருளீட்டு கடன் வழங்க வேண்டும். மஞ்சளுக்கு தனி வாரியம் அமைத்து உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்த வேண்டும்.

மஞ்சளை திட்டமிட்ட உற்பத்தி முறைக்குள் கொண்டு வந்து, சாகுபடி துவங்கும் போதே, ஆண்டுதோறும் கட்டுப்படியான விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். மஞ்சள் ஆன்லைன் வர்த்தகத்தை தடை செய்ய வேண்டும்.
கோவைக்கு மாற்றப்பட்டுள்ள "ஸ்பைசஸ் போர்டு' அலுவலகத்தை மீண்டும், ஈரோட்டுக்கு மாற்ற வேண்டும் என, வலியுறுத்தப்பட்டது.மாநிலத் தலைவர் ரத்தினசாமி, ""மத்திய அரசு மஞ்சளுக்கு, 4,092 ரூபாயும், கர்நாடக அரசு, 5,000 ரூபாயும் விலை நிர்ணயித்துள்ளது.
இதுபோல, தமிழக அரசும் விலையை நிர்ணயித்தால், வெளிமார்க்கெட்டை விட, விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும். கொப்பரை விலை குறைந்திருந்தபோது, அரசு ஆதார விலையை அறிவித்ததும், வெளி மார்க்கெட்டில் விலை உயர்ந்தது. அதுபோல, மஞ்சளுக்கும் ஆதார விலையை அரசு அறிவிக்க வேண்டும்.
மஞ்சள் விவசாயம் நலிவடைவதை தவிர்க்க, ஒருங்கிணைந்து கோரிக்கையை வலியுறுத்துவோம். அடுத்த கட்டமாக போராட்டத்தில் இறங்குவோம்," என்றார்.
மாவட்டத்தலைவர் குமாரசாமி தலைமை வகித்தார். மாவட்ட அலுவலக செயலாளர் லோகுசாமி, மாநில பொதுச் செயலாளர் வரதராஜன் பேசினர். மாவட்ட செயலாளர் சுப்பு முத்துசாமி நன்றி கூறினார்.

## இலவம் பஞ்சு விலை குறைவு விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : ஏப்ரல் 24,2012,02:49 IST

வருஷநாடு:வருஷநாடு பகுதிகளில் இலவம் பஞ்சு விலை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வருஷநாடு, தும்மக்குண்டு,வாலிப்பாறை மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இலவம் பஞ்சு விவசாயம் செய்து வருகின்றனர். ஏப்ரல்,மே மாதங்களில் காய்ப்புக்கு வரும்.கடந்தாண்டினை விட இந்தாண்டு பஞ்சு கொள்முதல் உற்பத்தி குறைவாக உள்ளது.
ஆரம்பத்தில் பஞ்சு விலை கிலோ ரூ.65 க்கு விற்கப்பட்டது. தற்போது ஒரே வாரத்தில் ரூ.15 குறைந்து ரூ.50க்கு விற்கப்படுகிறது. தொடர்ந்து விலை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

விவசாயி சி.அர்ச்சுனன் (வாலிப்பாறை) கூறுகையில்: வெளியூர் வியபாரிகளை வரவிடாமல் உள்ளூர் வியாபாரிகள் விவசாயிகளிடம் கிலோ ரூ.45,50-க்குவாங்கி இருப்பு வைத்து சில நாட்கள் கழித்து ரூ.100 விற்பனை செய்கின்றனர்.
இலவம் பஞ்சினை அரசு கொள்முதல் செய்ய வேண்டும்',என்றார்.

---

தினகரன்

**செண்டு மல்லி பூ விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நேரம்:2012-04-23 10:12:47

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் செண்டு மல்லி பூக்களுக்கான விலை அதிகரித்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
தர்மபுரி மாவட்டத்தில் தொப்பூர், நல்லம்பள்ளி, பொம்மிடி, கடத்தூர், மணியம்பாடி, மொரப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் செண்டுமல்லி பூ அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு நிலவும் சீதோஷ்ண நிலை காரணமாக இப்பகுதியை சேர்ந்த விவசாயிகளில் பெரும்பாலானோர் சீசனுக்கு தகுந்தபடி ரோஜா, கனாம்பரம், பட்டன் ரோஜா உள்ளிட்ட பல வகையான பூக்களை சாகுபடி செய்து வருகின்றனர். கோடை காலம் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், தற்போது சுமார் 500 ஏக்கருக்கு மேல் செண்டுமல்லி செடிகளில் மகசூல் கிடைத்து வருகிறது.
இங்கு உற்பத்தியாகும் செண்டுமல்லி தமிழகத்தில் கோவை, சேலம் மற்றும் பெங்களூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு கொண்டு செல்லப்படுகிறது. செடிகள் நடப்பட்டு ஒரு மாதத்திற்குள் செண்டு மல்லி பூக்கத் தொடங்குகிறது. ஒரு செடியில் தினமும் 15 பூக்கள் வரை பூக்கிறது. தண்ணீர் தெளித்து வைத்தால் 3 நாட்கள் வரை இந்த பூ வாடாமல் இருக்கும். முக்கிய விஷேசங்களுக்கு செண்டு மல்லி அதிகம் பயன்படுத்தப்படுகிறது.
விழாக்கள் மற்றும் அனைத்து விஷேச காலங்களில் செண்டு மல்லியின் தேவை அதிகமாக இருப்பதால் விலையும் அதிகமாக இருக்கும். இதனால் விவசாயிகள் ஆர்வத்துடன் சாகுபடி செய்கின்றனர். சில நாட்களுக்கு முன்பு ஒரு கிலோ பூ ரூ20 முதல் ரூ30 வரை விற்பனையானது. தற்போது பூக்களின் விலை உயர்ந்து வருகிறது. ஒரு கிலோ ரூ30 முதல் ரூ40 வரை விற்பனை

செய்யப்படுகிறது. சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் கோயில் விழாக்கள் அதிகளவில் நடப்பதால் செண்டு மல்லி பூக்கான தேவை அதிகரிக்கும். இதனால் இனி வரும் காலங்களில் பூக்கள் விலை மேலும் அதிகமாகும் நிலை உள்ளது. தற்போது விலை ஏற்றம் துவங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

---

**வேளாண் தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்ய சர்வதேச வேளாண் கல்வி பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டும் விவசாயி உரிமைகள் ஆணைய முன்னாள் தலைவர் பேச்சு**



விழாவில் விஞ்ஞானி ஒருவருக்கு பயிர் ரகங்கள் மற்றும் விவசாயி உரிமைகள் ஆணைய முன்னாள் தலைவர் எஸ்.நாகராஜன் விருது வழங்கிய போது எடுத்தபடம். பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி மற்றும் பலர் அருகில் உள்ளனர்.

*கோவை, ஏப்.24–*

*வேளாண் துறையை முன்னேற்ற சர்வதேச வேளாண் கல்வி பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்று விவசாயி உரிமைகள் ஆணைய முன்னாள் தலைவர் பேசினார்.*

நூற்றாண்டு விழா

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் மெட்ராஸ் வேளாண்மை மாணவர் சங்கம் தொடங்கப்பட்டு 100 ஆண்டுகள் நிறைவு பெற்று உள்ளது. இதற்கான விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசபூபதி தலைமை தாங்கினார். மெட்ராஸ் வேளாண்மை மாணவர் சங்க தலைவர் சுப்பையன் வரவேற்றார். ஆந்திர மாநில என்.ஜி.ரங்கா வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பி.ராகவா ரெட்டி, கேரள மாநில வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கே.ஆர்.விஸ்வாம்பரன், பெங்களூரு வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பி.ஜி.செங்கப்பா, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சி.ராமசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிறப்பு விருந்தினராக பயிர் ரகங்கள் மற்றும் விவசாயி உரிமைகள் ஆணைய முன்னாள் தலைவர் எஸ்.நாகராஜன் கலந்து கொண்டு நூற்றாண்டு விழாவை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

வேளாண் சட்ட விதிமுறைகள்

தேசிய அளவில் முன்னோடி பல்கலைக்கழகமாக வேளாண் பல்கலைக்கழகம் திகழ்கிறது. வேளாண்மையை முன்னேற்றும் வகையில் புதிய பாடதிட்டங்களான சர்வதேச வர்த்தகம், வேளாண் சட்ட விதிமுறைகள் குறித்த பாடங்களை வேளாண் பல்கலைக்கழகம் அறிமுகம் செய்ய வேண்டும். இந்த பாடத்தை மாணவர்களுக்கு கற்று தந்தால் மற்ற நாடுகளுடன் போட்டியிட ஏதுவாக அமையும்.

தென்கிழக்கு ஆசிய நாடுகளான மியன்மார், லாவோஸ் மற்றும் கம்போடியா நாடுகளில் உள்ள மக்கள் அரிசியை அடிப்படை உணவாக உட்கொள்கின்றனர். அந்த நாடுகளுக்கு உயர் விளைச்சல் ரக அரிசியை ஏற்றுமதி செய்ய நல்ல வாய்ப்பு உள்ளது. அதற்கான முயற்சியில் வேளாண் பல்கலைக்கழகம் ஈடுபட வேண்டும்.

சர்வதேச வேளாண் கல்வி

சர்வதேச வேளாண் கல்வி என்ற பாடத்தை வேளாண் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்த வேண்டும். இதன் மூலம் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வேளாண் தொடர்பான தேவைகளை பூர்த்தி செய்ய இயலும். மேலும் அந்த பகுதியில் கல்வி ஆராய்ச்சியை மேம்படுத்தவும், மாணவர் பரிமாற்றத்தை மேற்கொள்ள வேளாண் பல்கலைக்கழகம் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

வேளாண் வர்த்தகத்தில் பஞ்சாப், அரியானா மாநிலங்களை தவிர பிற மாநில விவசாயிகள் குறைந்த அளவில் ஈடுபடுகின்றனர். தமிழகத்தில் உள்ள விவசாயிகள் தங்களது வேலை நேரம் போக மீதம் உள்ள நேரங்களில் உணவு பதப்படுத்துதல், உணவு தர மேம்பாடு தொழில்களில் ஈடுபடலாம். இதன் மூலம் அதிக வருவாயை ஈட்ட முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

விருது

முன்னதாக விழாவில் நூற்றாண்டு விழா குறித்த சி.டி., வேளாண் மாணவர் சங்கத்துக்கான இணையதளம், நூற்றாண்டு விழா கட்டிடத்துக்கான அடிக்கல், விஞ்ஞானிகள் மற்றும் மாணவர்கள் 17 பேருக்கு விருதுகளை சிறப்பு விருந்தினர் வழங்கினார்.

விழாவில் பல்கலைக்கழக டீன் ஏ.ராஜராஜன், தொலைதூர கல்வி இயக்கக டீன் உதயசூரியன், பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்கள், விஞ்ஞானிகள், மாணவர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் செயலாளர் சிவக்குமார் நன்றி கூறினார்.

## நடப்பு 2011–12–ஆம் வேளாண் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி 25.26 கோடி டன்னாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு 2011–12–ஆம் வேளாண் பருவத்தில் (ஜூலை – ஜூன்) உணவு தானியங்கள் உற்பத்தி வரலாறு காணாத வகையில் 25.26 கோடி டன்னாக உயரும் என மத்திய அரசு மறு மதிப்பீடு செய்துள்ளது. நெல் மற்றும் கோதுமை உற்பத்தி அமோக அளவில் அதிகரித்து வருவதே இதற்கு முக்கிய காரணமாகும். உணவு பணவீக்கம் அதிகரித்து வரும் நிலையில் இது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும்.

மூன்றாவது கட்ட மதிப்பீடு

இந்தியாவில் உணவு தானியங்கள் உற்பத்தி கடந்த 2010–11–ஆம் வேளாண் பருவத்தில் 24.48 கோடி டன்னாக சிறப்பான அளவில் அதிகரித்து இருந்தது. நடப்பு பருவத்தில் உற்பத்தி இதைக் காட்டிலும் 3.2 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத்பவார் உணவு தானியங்கள் உற்பத்தி குறித்த மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீட்டை திங்கள்கிழமை அன்று வெளியிட்டார். அதில், உற்பத்தி இரண்டாவது கட்ட மதிப்பீடான 25.04 கோடி டன்னை காட்டிலும் 20 லட்சம் டன் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெல் உற்பத்தி

நெல் உற்பத்தி மதிப்பீடும் 10.28 கோடி டன்னிலிருந்து 10.34 கோடி டன்னாக உயர்த்தப்பட்டுள்ளது. சென்ற வேளாண் பருவத்தில் இது 9.60 கோடி டன்னாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது உற்பத்தி 7.7 சதவீதம் உயரும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

நம் நாட்டில் பிரதானமாக இரண்டு பருவங்களில் விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்கின்றனர். இந்த பருவங்கள் முறையே கரீஃப் மற்றும் ரபி என்று அழைக்கப்படுகின்றன. இந்தியாவில் மொத்த நெல் உற்பத்தியில் கரீஃப் பருவத்தின் பங்களிப்பு மட்டும் 85 சதவீதமாக உள்ளது. கரீஃப் பருவம் ஜூன் மாதம் தொடங்கி அக்டோபர் மாதம் நிறைவடைகிறது. அக்டோபர் மாதம் தொடங்கி மார்ச் மாதத்தில் நிறைவடையும் ரபி பருவத்தில் நெல் உற்பத்தியின் பங்களிப்பு 15 சதவீதமாகத்தான் உள்ளது. தென் மாநிலங்களில் ஆந்திராவும், தமிழ்நாடும் நெல் உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன.

அதேசமயம், கோதுமை உற்பத்தி ரபி பருவத்தில்தான் மும்முரமாக நடைபெறுகிறது. சென்ற பிப்ரவரி மாதத்தில் நடப்பு வேளாண் பருவத்தில் கோதுமை உற்பத்தி 8.83 கோடி டன்னாக இருக்கும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டு இருந்தது. மூன்றாம் கட்ட மதிப்பீட்டில் இந்த உற்பத்தி 9.02 கோடி டன்னாக உயரும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. சென்ற வேளாண் பருவ உற்பத்தியுடன் (8.69 கோடி டன்) ஒப்பிடும்போது இது 3.8 சதவீதம்

அதிகமாகும். மொத்த உணவு தானியங்கள் உற்பத்தியில் நெல் மற்றும் கோதுமை ஆகியவற்றின் பங்களிப்பு மட்டும் 77 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

சரத்பவார் கருத்து

உணவு தானியங்கள் உற்பத்தியில் ஏற்பட்டு வரும் வியத்தகு வளர்ச்சி குறித்து மத்திய விவசாய அமைச்சர் சரத்பவார் கூறும்போது, "உணவு தானியங்கள் உற்பத்தி உயர்ந்து வருவதற்கு விவசாயிகளை பாராட்ட கடமைப்பட்டுள்ளேன். உணவு தானியங்கள் கையிருப்பும் நன்றாக உள்ளது. அதேசமயம், இவற்றை சேமிக்கும் வசதி குறைவாக உள்ளது. எனவே, உணவு தானிய சேமிப்பு கிடங்கு வசதியை மேம்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட துறையினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

பருப்பு வகைகள்

நெல், கோதுமை உற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ள நிலையில், பருப்பு வகைகள் உற்பத்தி மதிப்பீடு 1.73 கோடி டன்னிலிருந்து 1.70 கோடி டன்னாக குறைக்கப்பட்டுள்ளது. சென்ற வேளாண் பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 1.82 கோடி டன்னாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது உற்பத்தி 6.6 சதவீதம் சரிவடையும் என முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

பருத்தி உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து, இதற்கான உற்பத்தி மதிப்பீடும் 3.41 கோடி பொதிகளிலிருந்து (ஒரு பொதி = 170 கிலோ) 3.52 கோடி பொதிகளாக மறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சென்ற மார்ச் மாதத்தில் பொது பணவீக்கம் 6.89 சதவீதமாக குறைந்துள்ளது. அதேசமயம், இதை கணக்கிடுவதில் 14.3 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள உணவு பணவீக்கம் 6.07 சதவீதத்திலிருந்து 9.94 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்நிலையில், உணவு தானியங்கள் உற்பத்தி வியத்தகு அளவில் அதிகரிக்கும் என்ற மதிப்பீடு பொருளியல் நிபுணர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## 2011–ஆம் ஆண்டில் தேயிலை இறக்குமதி 7 சதவீதம் சரிவு



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

2011 ஆம் காலண்டர் ஆண்டில் நாட்டின் தேயிலை இறக்குமதி அளவின் அடிப்படையில் 7 சதவீதம் குறைந்து 1.86 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது முந்தைய 2010 ஆம் ஆண்டில் 2 கோடி கிலோவாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மதிப்பின் அடிப்படையில், இறக்குமதி ரூ.214.44 கோடியிலிருந்து, 19.26 சதவீதம் குறைந்து, ரூ.172.69 கோடியாக சரிவடைந்தது.

கென்யா, மாலவி, நேபாளம், அர்ஜெண்டினா, ஈரான், இலங்கை, சீனா, கனடா, வியட்நாம், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து தேயிலையை இறக்குமதி செய்து மதிப்பு கூட்டி அதனை மீண்டும் ஏற்றுமதி செய்கிறது நம் நாடு.

கடந்த ஆண்டில் இறக்குமதி குறைந்து போனதற்கு இந்தியாவிலிருந்து தேயிலை ஏற்றுமதி சரிவடைந்ததே காரணமென கூறப்படுகிறது.

உலக தேயிலை உற்பத்தியில் 28 சதவீத பங்கினை கொண்டுள்ள இந்தியா, சர்வதேச அளவில் வர்த்தகத்தில் (ஏற்றுமதி + இறக்குமதி) 14 சதவீத பங்கினை கொண்டுள்ளது. அதேபோல், உலக அளவில் ஏற்றுமதியில் 1.1 சதவீத பங்குடன் நான்காவது இடத்தில் உள்ளது.

உலகின் தேயிலை உற்பத்தியில் இரண்டாவது பெரிய நாடான இந்தியாவிலுள்ள சுமார் 1,600 தேயிலை தோட்டங்களில் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் பணிபுரிந்து வருகின்றனர்.